இருக்கிறது. எனவே, தயவுசெய்து, உடனடியாக மணப்பாறையிலே அப்பகுதி மக்கள் பத்திரம் பதிவு செய்து கொள்ளலாம் என்கிற ஒரு அரசாணையை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், மேற்கண்ட 4 ஊர்களும் மணப்பாறை சார்பதிவு அலுவலகத்திற்கு அருகில் உள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால் மக்கள் சார்பில் இப்போதுதான் முதன் முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கோரிக்கையை விட்டிருக்கிறார்கள். அலுவலகத்திற்கு 2—3—1987-ல்தான் இதுமாதிரி மணப்பாறை சார்பதிவு அலுவலகத்துடன் சேர்க்க வேண்டும் என்று மனு வரப்பெற்றிருக்கிறது. ஆகவே, விரைவில், நீதிமன்றத்திற்கு நீதி வழங்கிய புரட்சித் தலைவர் ஆட்சியில் இதற்கும், மணப்பாறை சார்பதிவு அலுவலகத்துடன் இணைக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(ஈ) அதிக வருவாயுள்ள கோவில்களுக்கு கணக்கதிகாரிகள் நியமிக்கப்படாமலிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. மணிமாறன், ஆ. நடராசன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இந்து அறநிலையத் துறையின் கீழ் உள்ள அதிக வருவாய் உள்ள கோவில்களுக்கு, கணக்கதிகாரிகள் நியமிக்க 17—1—1985 ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண். 43-ல் வழிவகை செய்தும், இதுவரை அவ்வதிகாரிகள் நியமிக்கப்படாததால் அதிக வரவு-செலவு உள்ள கோவில்களின் கணக்குகள் சீர்கெடுவது குறித்து" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 ஏப்ரல் 10]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையில் துணை ஆணையர் செயல் அலுவலராக உள்ள கோயில்களில் ஒவ்வொன்றிலும் முது நிலைக்கணக்கு அலுவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி, அப்பணியிடங்களில் துறையிலுள்ள மண்டல தணிக்கை அலுவலர்களை அயல்பணியில் அமர்த்தலாம் என்று இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அரசுக்குப் பரிந்துரை செய்து வருமானம் மிகுந்த கோயில்களில் கணக்குகள் சீரமைக்கப்பட்டு சரிவரப்பேணப்பட வேண்டும் என்ற கருத்தில் மேற்குறித்த ஆணையரின் பரிந்துரையினை அரசு கொள்கை யளவில் ஏற்றுக்கொண்டது.

2. இதன் அடிப்படையில் 17—1—1985 நாளிட்ட வணிக வரி மற்றும் அறநிலையத்துறை ஆணை எண். 43-ல் மேலே குறிப்பிடப் பட்டுள்ள கோயில் நிர்வாகத்தின் இசைவோடு, முதுநிலைக் கணக்கு அலுவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி அப்பணி யிடங்களுக்கு துறையிலுள்ள மண்டல தணிக்கை அலுவலர்களில் தக்க நபர்களின் பெயர்களை அயல்பணியில் நியமனம் செய் வதற்காக காலம் மற்றும் நிபந்தனைகளுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆணை வெளியிடப்பட்டது.

3. மேற்படி அரசாணையின் அடிப்படையில் முதுநிலைக் கணக்கு அலுவலர்களை நியமனம் செய்ய திருக்கோயில்களின் நிர்வாகங்களின் இசைவிற்காக ஆணையரால் அணுகப்பட்ட போது, தற்பொழுது ஆலயக்கணக்குகள் தணிக்கையாளர்களால் தொடர் தணிக்கை செய்யப்பட்டு வருகின்றது என்பதாலும் கூடுதல் செலவினத்தைக் கருதியும், குறிப்பில் உள்ள முதுநிலைக் கணக்கு அலுவலர் நியமனத்திற்கு இசைவளிக்க இயலவில்லை யென்று திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக் கோயில் நீங்கலாக, ஏனைய திருக்கோயில்களின் நிர்வாகங்கள், ஆணையருக்கு தெரிவித்துள்ளன. திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலுக்கு மட்டும் கருவூலக்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 ஏப்ரல் 10

கணக்குத் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்க தக்கார் தீர்மானம் பெறப்பட்டுள்ளதால் முதற்கண் இத்திருக் கோயிலில் கணக்கு அலுவலரை நியமிக்கும் கருத்துரு தனியே அரசின் பரிசீலனையில் உள்ளது.

4. அதிக வருமானம் உள்ள திருக்கோயில்களில் தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கை பணியாளர்கள் அவ்வப்போது கணக்குகளை தணிக்கை செய்கின்றன. (Concurrent Audit) மேலும் மண்டல தணிக்கை அலுவலர்களும் தலைமை தணிக்கை அலுவலரும், திடீரென கணக்குகளை ஆய்வு செய்கின்றனர். இந்நிலையில் கணக்குகள் சீர்கேடுகள் அடைய வாய்ப்பில்லை. மேலும் திருக்கோயில்களின் அலுவலர்களும், தக்கார் அல்லது அறங்காவலர் குழுவும், கணக்கு வழக்குகளை அவ்வப்போது மேற்பார்வை செய்வதால் தவறுகள் ஏற்படுவதற்கு சிறிதும் வாய்ப்பில்லை என இந்த சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சில கோயில்கள் வருவாய் குறைவாக இருந்தாலும் சில கோயில்களுக்கு வருவாய் அதிகமாக இருந்தாலும் எல்லா கோயில்களுக்குமே தணிக்கை அதிகாரிகள் நியமிக்க இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு அதற்குப் பின்னாலே மண்டல தணிக்கை அலுவலர் தக்க நபர்களின் பெயர் களை சொல்லக் கேட்டுக் கொண்டபோது தற்போது ஆலயக் கணக்குகள் தணிக்கையாளர்களால் தொடர் தணிக்கை செய்யப் பட்டு வருகிற காரணத்தால், மண்டல தணிக்கை அலுவலர்களும் தலைமை தணிக்கை அலுவலரும் திடீரென கணக்குகளை ஆய்வு செய்கிற காரணத்தாலும் கணக்குகள் சீர்கேடுகள் அடைய வாய்ப்பு இல்லை என்றும் சொல்லிவிட்டு, திருவேற்காடு கருமாரி யம்மன் திருக்கோயிலுக்கு மட்டும் தற்போது ஒரு அலுவலர் நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தில் தவறு நடக்க வழி யில்லை என்று சொல்லிவிட்டு எதற்காக ஒரு கோயிலுக்கு மட்டும் நியமிக்க வேண்டும்? எனவே இந்த முரண்பாட்டைத் தவிர்க்க அனைத்து வருவாய் உள்ள கோயில்களுக்கும் ஏற் கெனவே பிறப்பிக்கப்பட்ட ஆணையைத் தொடர்ந்து கணக்குத்

1987 ஏப்ரல் 10] [திரு. மா. மணிமாறன்]

தணிக்கை அதிகாரிகள் நியமிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, இவ்வாறு கணக்குத் தணிக்கை அதிகாரிகள் நியமிப்பதால் கோயில் நிர்வாக அதிகாரிகளுக்கும் இவர்களுக்குமிடையே சிக்கல் ஏற்படும் என்று அரசு கருதுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுநிலைக் கணக்கு அலுவலர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்று 17—1—1985 நாளிட்ட அரசாணையில் சொல்லப்பட்டது. அதுவும் டெபுடி கமிஷனர்கள் எனப்படும் துணை ஆணையர்கள் மேற்பார்வையில் உள்ள கோயில்களுக்கு மட்டும்—அதாவது திருத்தணி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், மதுரை, திருவரங்கம், பழனி, திருவேற்காடு போன்ற 7 கோயில்களுக்கு மட்டும் தான் நியமிக்கப்பட வேண்டுமென்று 17—1—1985 அரசாணையில் சொல்லப்பட்டது. 18—1—1985 அன்றே அரசு சார்பில் மேற்கண்ட 7 கோயில்களுக்கும் கணக்குத் தணிக்கை அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று இசைவு கோரப்பட்டு திருவேற்காடு கோயிலுக்கு மட்டும் இசைவு தரப்பட்டதால் அப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற கோயில்கள் இதற்கு இசைவு தரவில்லை. ஆனால் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மேற்சொன்ன எல்லா கோயில்களுக்கும் தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு அந்தக் கோயில்களுக்கெல்லாம் கணக்குத் தணிக்கை அதிகாரிகள் நியமிக்கப்பட இருப்பதை குறித்து நான் மெத்தவும் பாராட்டுகிறேன். அறநிலையத் துறையிலேயே வைத்திருக்கிற தணிக்கைத் துறை அதிகாரிகளுக்கு ஏன் உத்தியோக உயர்வு கொடுத்து அந்தப் பதவிகளுக்கு நியமிக்கும் வாய்ப்பு கொடுக்கக்கூடாது? அப்படி அவர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதைப்பற்றி அரசு கணக்கில் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.